# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 157 | வியாழக்கிழமை Thursday | 03.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# "ஆன்லைனில் ஓட்டுநர் உரிமம், வாகனப் பதிவுச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்யலாம்"

## முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை: "ஓட்டுநர் தேர்வில் தேர்ச்சி பெற்ற அன்றைய தினமேடிஜிட்டல்ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும். புதிய வாகனம் வாங்குவோர் டிஜிட்டல் ஆர்சி–யை (வாகனப்பதிவுச்சான்றிதழ்) இணையம் வழியாகப் பதிவிறக்கம் செய்யலாம்" என்பன உள்ளிட்ட புதிய அறிவிப்புகளை முதல்வர்விஜய்இன்று சட்டப்பேரவையில் வெளியிட்டார்.

போக்குவரத்து அலுவலகத்தின் சேவைகள் குறித்து சட்டமன்றப் பேரவையில் விதி 110–இன் கீழ் தமிழக முதல்வர் விஜய் வெளியிட்ட அறிவிப்புகளின் விவரம்: புதிய வாகனம் வாங்குவோர் டிஜிட்டல் பதிவுச் சான்றிதழ் (digital registration certification) இணையம் வழியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாநிலம் முழுவதும் 15.09.2026 முதல் இந்த வசதி ஏற்படுத்தப்படும்.

ஓட்டுநர் தேர்வில் (Driving Test) தேர்ச்சி பெற்ற விண்ணப்ப தாரர்களுக்கு அன்றைய தினமேடிஜிட்டல்ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும். இந்த வசதி மாநிலம் முழுவதும் 15.09.2026 முதல் நடைமுறைப்படுத்தப்படும். போக்குவரத்து சம்பந்தமான அனைத்து அலுவலக சேவைகளுக்கும் "Anywhere Registration /Licensing" என்றமுறையில் வசதிகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் டிஜிட்டல் முறையில் வழங்கும் வசதி ஏற்படுத்தப்படும். அரசு அலுவலகங்கள் மற்றும் பிற அதிகாரப்பூர்வ அமைப்புகள் கியூ ஆர்கோடினைஸ்கேன் செய்து மின்னணு முறையில் ஆவணங்களை சரிபார்க்க முடியும்.இதனால்பொருத்தப்பட்ட அட்டைகளாக விண்ணப்பதாரர்களுக்குக் கிடைப்பதற்கு ஒரு வாரம் முதல் ஒரு மாதம் வரை காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாமதத்தினால் பொதுமக்களுக்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகிறது. இந்த காலதாமதத்தினைத் தவிர்க்கும் வகையில், ஓட்டுநர் உரிமம் (Driving License) (Registration Certificate) ஆகியவை Digital முறையில் பொதுமக்கள் தாங்களே பதிவிறக்கம் செய்துகொள்ளும் நடைமுறை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்படும். மாநிலம் முழுவதும் 15.09.2026 முதல், ஓட்டுநர் உரிமங்கள் (Driving Licences) மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் (Registration Certificates) டிஜிட்டல் முறையில், அதாவது Digital Driving License மற்றும் Digital Registration Certificate வழங்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

ஒரே நாளில் ஓட்டுநர்உரிமம்டிஜிட்டலில் மின்னணு வாகனப் பதிவுச்சான்றிதழ் முறை (Digital RC) அறிமுகம் செய்வதன்மூலம், புதிய வாகனம் வாங்குவோர்,வாகனப் பதிவை அதாவது,Digital RC–யை இணையம் வழியாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அதேபோன்று ஓட்டுநர் தேர்வில் (Driving Test) தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு, அன்றைய தினமே ஓட்டுநர் உரிமம் டிஜிட்டல் முறையில் வழங்கப்படும். அரசு அலுவலகங்கள் மற்றும் பிற அதிகாரப்பூர்வ அமைப்புகள் QR code–ஐ scan செய்து மின்னணு முறையில் ஆவணங்களைச் சரிபார்க்க முடியும். இதன்மூலம் போலி ஆவணங்கள் தவிர்க்கப்படும்.

டிஜிட்டல் ஓட்டுநர் உரிமம் வழங்கும் முறையினால், ஆவணம் தொலைந்தாலோ, சேதமடைந்தாலோ மீண்டும் பதிவிறக்கம் செய்துகொள்ளவும், அச்சிட்டுக்கொள்ளவும்முடியும்." எனத் தெரிவித்துள்ளார்.

இந்த முறையினால், ஆவணம் தொலைந்தாலோ, சேதமடைந்தாலோ மீண்டும் பதிவிறக்கம் செய்துகொள்ள வும், அச்சிட்டுக்கொள்ளவும் முடியும். ஓட்டுநர் உரிமம்பெறுவதற்கும், வாகனத்தைப் பதிவு செய்வதற்கும், வாகனப்பதிவு புதுப்பித்தல் மற்றும் படிப்படியாக போக்குவரத்து சம்பந்தமான அனைத்து அலுவலக சேவைகளுக்கும் தமிழ்நாட்டில் எந்தவொரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலும் விண்ணப்பித்து "Anywhere Registration / Licensing" நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே செப்டம்பர் 15 ஆம் தேதி அறிமுகம் செய்யப்படவுள்ள திட்டத்தில் இணையதள முகவரி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

அதில் இருந்து தங்களுக்கு தேவையான ஓட்டுநர் உரிமம், வாகனப் பதிவுச்சான்று பதிவிறக்கம் செய்து கொள்ள லாம்.

# "தி.மு.க. ஆட்சியிலும் விவசாயிகள் மீதான 5,000க்கும் மேலான வழக்குகள் ரத்து செய்யப்பட்டன" எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி தகவல்



சென்னை: "கடந்த திமுக ஆட்சியின் போது, குடியுரிமை திருத்தச் சட்டம், வேளாண் சட்டங்கள், 8 வழிச் சாலை திட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், மீத்தேன் ஹைட்ரோகார்பன் திட்டம் உள்ளிட்டவைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பதியப்பட்ட 5,000–க்கும் மேற்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன" என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசும் போது, "விவசாயிகள் மீதான வழக்குகளை திரும்பப் பெறுவது வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை என்று ஒரு அமைச்சர் பேசியிருந்தார். அது சரியான தகவல் அல்ல.

எங்கள் ஆட்சியின் போது, குடியுரிமை திருத்தச் சட்டம், வேளாண் சட்டங்கள், 8 வழிச் சாலை திட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், மீத்தேன் ஹைட்ரோகார்பன் திட்டம் உள்ளிட்டவைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பதியப்பட்ட 5,000–க்கும் மேற்பட்ட வழக்குகளை முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் வாபஸ் பெற்றார். அப்போது 110 விதியின் கீழ் இந்த வழக்குகள் ரத்து செய்யப்படவில்லை. அதிகாரிகளைஅழைத்து வழக்குகளை வாபஸ் பெற உத்தரவிட்ட பிறகு, சட்டப்பேரவையில் தெரிவித்தார்" என்றார்.

முன்னதாக, விதி எண் 110–இன் கீழ் முதல்வர் விஜய் இன்று சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பில், "கடந்த 2021 மே முதல் 2026 ஏப்ரல் வரை, தங்களது வாழ்வாதாரம், உரிமைகள் மற்றும் நியாயமான கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும்.

ஜனநாயக உரிமைகளை மதிக்கும் நமது அரசு, கடந்த ஆட்சியாளர்களால் விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய போது அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மனிதநேய அடிப்படையிலும், ஜனநாயகக்கொள்கைகளின் அடிப்படையிலும் அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற அரசு முடிவு செய்துள்ளது.

விவசாயிகள் மற்றும் ஆசிரியர்களுக்கும், அவர்களது நியாயமான கோரிக்கைக்களுக்கும் இவ்வரசு உறுதுணையாக நிற்கும். திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் தொழிற்பேட்டை எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட விவசாயிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டதுடன்,சிலவிவசாயிகள் மீது குண்டர் தடுப்புச் சட்டமும் போடப்பட்டது.

பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு எதிராக, விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். விவசாய நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற நோக்கத்தோடு, விமான நிலையத் திட்டத்தை கைவிட வேண்டும் என்று போராடிய விவசாயிகள் மீதும் முந்தைய அரசால் மனித நேயமற்ற வகையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

மனிதநேய அடிப்படையிலும், ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையிலும் அனைத்து வழக்குகளையும் திரும்பப்பெற அரசு முடிவு செய்துள்ளது. இந்த நடவடிக்கை ஜனநாயக உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதோடு, சாமானிய மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான நம்பிக்கையை உறுதிப்படுத்தும்" எனத் தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

# தொடர் சரிவில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,800 குறைவு

சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (செப்.2) சென்னையில் பவுனுக்கு ரூ.1,800 என்று குறைந்துள்ளது. இதற்கான காரணம் குறித்து பார்ப்போம்.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு,தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா – ஈரான் இடையிலானமோதலின் தாக்கம் உலகபொருளாதாரத்தில் எதிரொலித்து வருகிறது. அது சர்வதேச அளவில் தங்க விற்பனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மே மாதம் தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. அதோடு நேற்று (செப்.1) தேவையின்றி தங்கம் வாங்காதீர்கள் என நாட்டு மக்களிடம் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



இதையடுத்து தங்கம் விலை நேற்று மாலை அதிரடியாக சரிந்தது. நேற்று காலை தங்கம் விலை பவுனுக்கு ரூ.120 உயர்ந்திருந்தது. இந்நிலையில், நேற்று மாலை தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,680 சரிந்தது.

இந்தச் சூழலில் சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.225 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,950–க்கு விற்பனையாகிறது. பவுனுக்கு ரூ.1,800 குறைந்து, ஒருபவுன் ரூ.1,11,600–க்கு விற்பனையாகிறது.

24 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.246 குறைந்து, ஒரு கிராம் ரூ.15,218–க்கு விற்பனையாகிறது. 18 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.225 குறைந்து, ஒரு கிராம் ரூ.11,720–க்கு விற்பனை யாகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.250–க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,50,000–க்கும் விற்பனையாகிறது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# இந்திய விளையாட்டுத்துறைக்கு கோவை பிரகாசமான எதிர்காலம் - அபினவ் பிந்த்ரா நம்பிக்கை



மத்திய அரசின் நடவடிக்கையால் இந்தியாவில் விளையாட்டுத் துறைவேகமாகவளர்ந்து வருகிறது என்றும்,வரும் ஆண்டுகளில் சர்வதேச போட்டிகளில் இந்திய வீரர்களின் செயல்பாடு மேலும் சிறப்பாக இருக்கும் என்றும் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற துப்பாக்கிச் சுடுதல் வீரர் அபினவ் பிந்த்ரா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் விளையாட்டுத் துறைக்கு அரசு அளித்து வரும் ஆதரவு தற்போது உச்ச நிலையில் இருப்பதாக குறிப்பிட்ட அவர், புதிய விளையாட்டுக் கொள்கையின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் விளையாட்டுத் துறையில் ரூ.30 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக முதலீடு செய்யப்பட உள்ளதாக தெரிவித்தார்.

உயர்நிலை விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஆதரவு பாராட்டுக்குரியதாக இருந்தாலும், அதன் பலன்கள் அடிமட்ட அளவிலான விளையாட்டுத் திறமைகளையும் சென்றடைய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவில் இளம் விளையாட்டுவீரர்களின் எண்ணிக்கைதொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், பல்வேறு விளையாட்டுகளில் புதிய திறமைகள் வெளிவந்து கொண்டிருப்பதாகவும் அபினவ் பிந்த்ரா தெரிவித்தார்.தனது அறக்கட்டளை மூலம் 11 முதல் 16 வயதுக்குட்பட்ட சுமார் 250 இளம் விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு விளையாட்டுகளில் ஆதரவு வழங்கி வருவதாகவும் அவர் கூறினார். மேலும், விளையாட்டு என்பது பதக்கங்களை வெல்வதற்கான ஒரு தளமாக மட்டுமல்லாமல், இளைஞர்களை சிறந்த குடிமக்களாகவும், ஆரோக்கியமான மனிதர்களாகவும் உருவாக்கும் முக்கிய கருவி என்றும் அபினவ் பிந்த்ரா குறிப்பிட்டார்.

இந்தியாவின் இளைஞர்கள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதற்கு விளையாட்டில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்றும், ஒவ்வொரு இளைஞரும் விளையாட்டை வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

வரும் பத்தாண்டுகளில் இந்தியாவில் விளையாட்டுத் துறையில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்படும் என நம்பிக்கை தெரிவித்த அபினவ் பிந்த்ரா, ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் செயல்பாடு தொடர்ந்து மேம்படும் என்ற நம்பிக்கையுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை மற்றும் கனவுகள் மீது நம்பிக்கை - இவற்றை ஒருபோதும் கைவிடக்கூடாது என்பதே இளம் தலைமுறையினருக்கு தனது முக்கிய அறிவுரை என்றும் அபினவ் பிந்த்ரா தெரிவித்தார்.



# அம்மூரில் நகர்புற பசுமையாக்கல் திட்டம் மலர் செடிகள் நட்டு மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் செவ்வாய்க்கிழமை வாலாஜா வட்டத்திற்குட்பட்ட அம்மூர் பேரூராட்சியில் நகர்புற பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் மலர் செடிகள் நடும் பணியை தொடங்கி வைத்தார்.

அம்மூர் பேரூராட்சியின் 12 மற்றும் 13-வது வார்டுகளில், எல்.எப்.சி. மேல்நிலைப்பள்ளி எதிரில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலையின் நடுத்தடுப்புப் பகுதியில் (சென்டர் மீடியன்) திரிவேணி நிறுவனம் சார்பில் மலர் செடிகள் நடப்பட்டன. நகர்புற பகுதிகளில்பசுமைப்பரப்பை அதிகரித்து சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிகழ்ச்சியில் அம்மூர் பேரூராட்சி தலைவர் சங்கீதா மகேஷ், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் சரிதா ஜெயவேல், சண்முகம், பேரூராட்சி செயல் அலுவலர் அர்ஜூன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநில நெடுஞ்சாலையின் நடுத்தடுப்பில் மலர் செடிகள் நடப்பட்டதன் மூலம் சாலை அழகுபடுத்தப்படுவதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இத்திட்டம் பயனளிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கல்வியே வாழ்க்கையை மாற்றும் மிகப்பெரிய ஆயுதம் அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் பேச்சு



தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா

தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம்,தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா நடைபெற்றது. விழாவிற்கு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் செந்தில்ராஜன் தலைமை வகித்தார். பள்ளித் தலைமையாசிரியர் சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். மாணவி நந்தனா வரவேற்றார்.விழாவில் பதிவாளர் செந்தில்ராஜன் பேசுகையில், "நமது வாழ்க்கையை மாற்றக்கூடிய மிகப்பெரிய ஆயுதம் கல்வி. சிறுவயதில் நமக்கு இருக்கும் லட்சியங்களை அடைவதற்கு கல்வி மிகவும் அவசியம். இதுவரை 24 நாடுகளுக்குச் சென்று எனது ஆராய்ச்சி தொடர்பாகப் பேசியுள்ளேன். மாணவர்கள் வெளியூர்களுக்குச் சென்று படிப்பதன் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளலாம்" என்றார். "மாணவர்கள் கணிதப் பாடத்தைக் கண்டு பயப்படாமல், அதன் சூத்திர ங்களைப் புரிந்து கொண்டு விரும்பிப் படிக்க வேண்டும். ஒரு பாடத்தை விரும்பிப் படித்தால் அது மனதில் ஆழமாகப் பதியும்.மாணவர்கள் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. மொபைல் போனில் அதிக நேரம் செலவிடுவதால் படிப்பில் ஆர்வம் குறையக்கூடும். தகவல்களையும் நம்பக்கூடாது. ஒரு பாடத்தை நடத்துவதற்காக ஆசிரியர்கள் பல மணி நேரம் தயாராகி வருகின்றனர். எனவே, மாணவர்கள் ஆசிரியர்களின் அறிவுரைகளைக் கேட்டு சிறப்பாகப் படிக்க வேண்டும். படிக்கும்போது எதுவும் கடினம்என்று எண்ணாமல், புரிந்து படிக்க வேண்டும்.தாய்,தந்தையரையும் ஆசிரியர்களையும் மதித்து நடப்பதுடன், தாங்கள் பயிலும் பள்ளிக்கும் பெருமை தேடித் தர வேண்டும்" என்று அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பதிவாளர் செந்தில்ராஜன் புத்தகங்களைப் பரிசாக வழங்கினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியை ஆர்த்தி மற்றும் ஆசிரியர் ஸ்ரீதர் ஆகியோர் செய்திருந்தனர். மாணவி ரித்திகா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நிறைவாக ஆசிரியை முத்துலட்சுமி நன்றி கூறினார்.

# விளாப்பாக்கம் டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான பயங்கரவாதம் குறித்த ஒரு நாள் கருத்தரங்கம்

ராணிப்பேட்டை மாவட்டம் விளாப்பாக்கம் டி.எல்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின்பாதுகாப்புமற்றும் போர் திறனியல் துறை சார்பில் "Terrorism: A Threat to National Security" என்ற தலைப்பில் "STATRGEM-2026"எனும் தேசிய அளவிலான ஒருநாள் கருத்தரங்கம் 01.09.2026 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு கல்லூரி கருத்தரங்க மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தலைவர் திரு. A.L. ரவி அவர்கள், கல்லூரியின் தாளாளர் திருமதி. P. கோமதி அவர்கள், கல்லூரியின் முதல்வர் முனைவர் D. கௌதமன் அவர்கள் மற்றும்புலமுதன்மையர் திருமதி.B.நிர்மலா ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். அவர்களின் வழிகாட்டுதலும் ஊக்கமும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்தது.



இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக குருநானக் கல்லூரி (தன்னாட்சி), வேளச்சேரி, சென்னை - 600 042 சார்பிலான பாதுகாப்பு மற்றும் போர் திறனியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் S. உமா அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார்.

பயங்கரவாதம் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்படுத்தும் அச்சுறுத்தல்கள், அதன் உலகளாவிய மற்றும் பிராந்திய தாக்கங்கள் குறித்தும், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இளைஞர்களின் பங்கு குறித்தும் அவர் விரிவாக விளக்கினார். மேலும், கருத்தரங்கின் ஒரு பகுதியாக கல்வியியல் கட்டுரை வழங்கல்கள் (Academic Paper Presentations) மற்றும் ஊடாடும் கேள்வி-பதில் அமர்வு (Interactive Q & A Session) ஆகியவை நடைபெற்றன.

இக்கருத்தரங்கில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர். கருத்தரங்கம் மாணவர்களுக்கு தேசிய பாதுகாப்பு குறித்த தெளிவான புரிதலையும், பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் விழிப்புணர்வையும் வழங்கியது. பாதுகாப்பு மற்றும் போர் திறனியல் துறை ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சி அனைவரின் பாராட்டையும் பெற்றது.






# கடையநல்லூர் கடகாலீஸ்வரர் உடனுறை கரும்பால் மொழி அம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊர் பெயர் வர காரணமாக அமைந்துள்ள கடகாலீஸ்வரர் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது திருக்கோவிலில் கடந்த திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் அப்போதைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் மாண்புமிகு சேகர் பாபு அவர்களின் ஆணைப்படி கடையநல்லூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அதிமுகவைசார்ந்தகிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா அவர்களின் முயற்சியால் பல லட்ச ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது திருப்பணிகள் முடிவடைந்து திங்கட்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு கடந்த 26ம் தேதி காலையில் மங்கள இசை, விக்னேஸ்வர பூஜை, பஞ்சகவ்யம், மகா கணபதி ஹோமம், கோபூஜை, மாலையில் ராக்ஷோக்னம், பலிபூஜை, பூர்ணாகுதி, 27ம் தேதி காலையில் சாந்தி ஹோமம், விசாகஹோமம், கன்னியா பூஜை, சுமங்கலி பூஜை, மாலையில் தீர்த்த சங்கீர்த்தகணம், அண்ணாமலை நாதர்கோவிலில் இருந்து தீர்த்தம் அழைத்து வருதல், வாஸ்துசாந்தி, பிரவேசபலி தீபாரதனை நடைபெற்றது.

28ம் தேதி காலையில் மூர்த்தி ஹோமம், அக்னி சங்ஹிரகனம், யாகசாலை பிரவேசம், மாலையில் சோமகும்ப பூஜை, கும்ப அலங்காரம், வேள்வி கலாகர்ஷனம், முதற் கால யாக வேள்வி பூர்ணாகுதி நடைபெற்றது.

29ம் தேதி காலையில் சூரிய பூஜை, இரண்டாம் கால யாக வேள்வி, வேத பாராயணம், திரவ்யாகுதி, மாலையில் விசேஷ சந்தி, சோமபூஜை, மூன்றாம் கால யாக வேள்வி, ருத்ரதிரிசதி நடைபெற்றது.

30ம் தேதி காலையில் பஞ்சகவ்யம், மண்டபார்சனை, நான்காம் கால யாகவேள்வி, அந்தர்யாகம், பூர்ணாகுதி, மாலையில் விக்னேஸ்வர பூஜை, ஐந்தாம் கால யாக வேள்வி, ஸ்ரீ லலிதா சகஸ்ர நாம பாராயணம் நடைபெற்றது.

காலையில் 5 மணிக்கு விக்னேஸ்வர பூஜை, 6ம் கால யாக வேள்வி, ஸ்ரீ வாரயாக வேள்வி, 6.15 மணிக்கு மேல் 7.15 மணிக்குள் பரிவார மூர்த்திகள் மகா கும்பாபிஷேகம், அலங்காரம், தீபாரதனை, 7.15 மணிக்கு மேல் 8.45 மணிக்குள் நாடி சந்தானம், யாத்ராதானம், கடம் புறப்பாடு நடைபெற்றது. 9.15க்கு மணிக்கு மேல் 10.20 மணிக்குள் ஸ்ரீ கரும்பால் மொழி அம்பாள் உடனுறை ஸ்ரீ கடகாலீஸ்வரர் மற்றும் ராஜகோபுரம் மகா கும்பாபிஷேகம், தொடர்ந்து மூவாலய மகா கும்பாபிஷேகம், சிறப்புக் மகா அபிஷேகம் சிறப்பு அலங்கார மகா தீபாரதனை நடைபெற்றது. 12 மணிக்கு சிறப்பு அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது.

விழாவில் ஆன்மீக சான்றோர்கள் மற்றும் கௌரவ தலைவர்கள் அரசு ஒப்பந்ததாரரும், திருமலைக்குமாரசுவாமி கோவில் அறங்காவலர் குழு தலைவருமான அருணாசலம் செட்டியார்,,

உத்திர பிரதேச மாநிலம் வாரணாசி மாவட்ட ஆட்சியர் கடையநல்லூரைச் சார்ந்த ராஜலிங்கம் ஐஏஎஸ், கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு. ராசேந்திரன் எம்எல்ஏ, உதவி ஆணையாளர் அபி நிஷா, உதவி பொறியாளர் சஹுகுமார், செயல் அலுவலர் கணேஷ்குமார், கணக்கர் முத்துக்குமார் திமுக முன்னாள் மாவட்ட செயலாளர் செல்லத்துரை முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வி முருகேசன் மாலை அம்மாள் மாரியப்பன் திருப்பணி கமிட்டியாளர்கள் தலைவர் சொக்கலிங்கநாடார் செயலாளர் இந்தியன் வங்கி (ஓய்வு) சுப்பையா, பொருளாளர் நல்லமுத்து, ஆசாரி பொருளாளர் பரமசிவன், தொழிலதிபர்கள் பெட்ரோல் பங்க் கனகராஜ் கிருஷ்ணாகேன்டீன் மாரியப்பன், அரசு ஒப்பந்ததாரர் அதிபன் மாடசாமி நகர அதிமுக செயலாளர் எம் கே முருகன், கோமதி அம்பிகை டிரான்ஸ்போர்ட் வைரவன் முன்னாள் ஒன்றிய செயலாளர் காசி தர்மம் துரை, சுந்தர மகாலிங்கம் ,உட்பட ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை திருக்கோவில் நிர்வாக கமிட்டி மற்றும் பக்தர்கள் குழுவினர், கடையநல்லூர், ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர். கடையநல்லூர் நகர காவல் ஆய்வாளர் கிறிஸ்டி தலைமையில் உதவி ஆய்வாளர் முரளிதரன் மற்றும் பெண் காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் மிகச் சிறப்பாக பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தீயணைப்பு நிலைய அலுவலர் ஷேக் தலைமையில் தீ மற்றும் விபத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டன



மதுரை ஜே ஜே நகர் மெயின் ரோடு பாண்டி கோவில் 40 வது வார்டு அமைந்திருக்கும் அருள்தரும் ஸ்ரீ வரசக்தி விநாயகர் திருக்கோவில் ஜீர்னோதாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது நிகழ்ச்சிக்கு தலைவர் முருகானந்தம், செயலாளர் மோகன், பொருளாளர் திருப்பதி வெங்கடேஷ், துணைத் தலைவர் லட்சுமணன், சுந்தரம், துணைச்செயலாளர் கண்ணதாசன், பழனிவேல், சட்டஆலோசகர் செந்தில்வேல், ஆடிட்டர் ராமநாதன் ஆகியோர் கும்பாபிஷேக விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்தனர் கலந்து கொண்ட பக்த கோடிகள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக வெற்றி கழகத்தின் வழக்கறிஞர் சோலை பழனிவேல் ராஜன் மகளிர் அணி அமைப்பாளர் மஞ்சுளா தேவி உட்பட பலர் கலந்து கொண்டனர்



மதுரைகிழக்குவட்டாட்சியர்அலுவலகத்தில்செயல்பாடுகள்மற்றும்பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் வருவாய் தொடர்பான சேவைகள், மனுக்கள் மீதான நடவடிக்கைகள், பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை, சமூக பாதுகாப்புத் திட்டங்கள், வருமானம், இருப்பிடம், சாதிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்கள் வழங்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.



தூத்துக்குடி மேட்டுப்பட்டி அருள்மிகு ஸ்ரீ உமய பார்வதி அம்மன் கோவில் கொடை விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு அன்னதானத்தை, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க பொருளாளர் எஸ்.ஆர். சந்தனராஜ், தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத் தலைவர் இசக்கிமுத்து உள்ளிட்ட சங்க நிர்வாகிகள், கோவில் நிர்வாகிகள், கொடைவிழா குழுவினர், உள்ளூர் இளைஞர் மற்றும் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.



மாமன்னர் புலித்தேவரின் 311வது பிறந்த நாளையொட்டி தென்காசி மாவட்ட புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக புலித்தேவரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். சுதந்திர போராட்ட வீரர் மாமன்னர் பூலித்தேவரின் 311வது பிறந்த நாளையொட்டி நெல்கட்டும்செவலில் அமைந்து உள்ள அவரது சிலைக்கு தென்காசி மாவட்ட புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பாக சொக்கம்பட்டி முத்து பிரகாஷ் தலைமையில் கழக நிர்வாகிகள் புலி தேவரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்இதில்இதில்ஊராட்சிமன்றதுணைத்தலைவர்செல்வகுமார், சொக்கம்பட்டிரமேஷ், மாமன்னர்புலித்தேவரின் பாசறை மாநில செயலாளர் காளிராஜ் பாண்டியன், சீனி பாண்டியன், குமார், பாலா மற்றும் பல கலந்து கொண்டனர்

# கடையநல்லூர் அரசு கல்லூரியில் ரத்ததான முகாம்

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக



2/9/2026 அன்று கல்லூரி வளாகத்தில் ரத்ததான முகாம் நடைபெற்றது இம்முகாமை கல்லூரி முதல்வர் முனைவர் கே ஆர் பீர்முகமது தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்கள். முன்னதாக நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் முனைவர் ஆ. பால் மகேஷ் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவர்கள் டாக்டர் எஸ் அம்பிகாபதி, டாக்டர் சிவராம் கௌதம் மற்றும் ஆய்வக உதவியாளர் திருமதி வேளாங்கண்ணி அவர்தம் குழுவினருடன் வந்திருந்து ரத்ததான முகாமிற்கு மருத்துவர்களுடன் ஒருங்கிணைப்பு செய்திருந்தனர். ரத்ததான முகாமில் தகுதி வாய்ந்த மாணவ மாணவிகளிடமிருந்து 25 யூனிட் ரத்தம் தானமாக பெறப்பட்டது. இந்த ரத்ததான முகாமில் பெறப்பட்ட ரத்தவகைகள் பொதுமக்கள் பயன்பெறும் வண்ணம் தானமாக தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை குருதி வங்கி நிலைய மருத்துவ குழுவினர் பெற்றுச் சென்றனர். இந்நிகழ்வில் ஏராளமான மாணவ மாணவிகள் அனைத்து துறை தலைவர்கள் பேராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு மாணவ குருதி கொடையாளர்களுக்கு பக்கபலமாக இருந்தனர். இந்நிகழ்வினை முனைவர் ராஜேஷ் கண்ணா தொகுத்து வழங்கி அனைவருக்கும் இறுதியில் நன்றி கூறினார்கள். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் பால்மகேஷ் ரத்ததான முகாமை சிறப்பாக ஒருங்கிணைப்புசெய்திருந்தார்.

## ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளை திரும்ப பெருவதாக அறிவிப்பு

# தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் வரவேற்று அறிக்கை

சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் அனைத்து திரும்ப பெருவதாக அறிவித்துள்ளார் இதனை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வரவேற்கிறோம்

மாணவர்கள நலன் கருதி பள்ளி உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.335 கோடியும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு பள்ளிகள் அருகில் உள்ள சாலைகளை மேம்படுத்த ரூ.110 கொடியை ஒதுக்கியுள்ளதையும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வரவேற்கிறேன்

அதேநேரத்தில் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி 110விதியின் கீழ்தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஒய்வூதிய திட்டத்தை திருத்தம் செய்து பழைய ஒய்வூதிட்டத்தை கொண்டுவருவோம் என்று அறிவித்தபடி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களிடம் பிடித்தம் செய்யும் தொகையை ஓய்வுபெறும் நேரத்தில் திரும்ப வழங்கவேண்டும் அரசு செலுத்துகின்ற தொகையை ஓய்வூதியமாக வழங்கும் விதமாக திருத்தம் செய்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் எதிர்கால வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும்

சமவேலைக்குசம ஊதியம் கேட்டு போராடிய இடைநிலை ஆசிரியர்களின் போராட்ட காலமான



27 நாட்களும் ஈட்டிய விடுப்பாக ஏற்று ஊதிய பலன்களை வழங்க வேண்டும்

பகுதிநேர சிறப்பாசிரியர் 12 ஆயிரம் ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் பள்ளிக்கல்வி அமைச்சர் அறிவித்த 2200 உடற்கல்வி ஆசிரியர்கள் பணியிடத்தை பகுதி நேர ஆசிரியர்களை கொண்டே முழுவதுமாக நிரப்பப்பட்ட வேண்டும் , பகுதிநேர ஆசிரியர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்யும் வரை வாரத்தில் ஐந்துநாட்களும்பள்ளிக்கு வரவழைத்து தொகுப்பூதியமாக மாதம் ரூ ,25.000/- வழங்க வேண்டும்

மேற்கண்ட கோரிக்கைகளை 110 விதியின் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலன் மற்றும் எதிர்கால வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டுமென தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறேன்

சா.அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு

# கலவை அருகே பரிதாபம்: கிணறு தூர்வாரும்போது நிலுவை மரத்திலிருந்து கீழே விழுந்த தொழிலாளி உயிரிழப்பு

ராணிப்பேட்டை மாவட்டம், மேச்சேரி அடுத்துள்ள ராந்தம் துரைராஜ் நகர் பஜனை கோவில் தெருவைச் சேர்ந்தவர் கதிரவன் (43) இவரது மனைவி தேவி இவர்களுக்கு ஹரிஸ்ரீ (11) என்ற மகளும் உள்ளனர். இவர் அரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த மூர்த்தி என்பவரிடம் கிணறு தூர்வாரும் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். நேற்று மதியம் சுமார் 12 மணியளவில், கலவை அடுத்த அலாளச்சேரி கிராமத்தைச் சேர்ந்த தேவன் என்பவருக்குச் சொந்தமான கிணற்றில் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டன. இதற்காக நிலுவை மரம் நட்டு, கிரேன் அமைக்கும் பணி நடைபெற்றது. அப்போது கதிரவன் நட்ட நிலுவை மரத்தின் மீது ஏறி, அதன் நான்கு மூலைகளிலும் கயிறு (ரோப்) கட்டும் பணியில் ஈடுபட்டார்.

கயிறுகளைக் கட்டி முடித்துவிட்டு மரத்தில் இருந்து கீழே இறங்கியபோது, எதிர்பாராதவிதமாக பாதி மரத்தில் கைதவறி கீழே விழுந்தார். நிலைகுலைந்து விழுந்த



வர், அருகில் இருந்த கிணற்றுக்குள்ளேயே விழுந்ததால் பலத்த காயமடைந்தார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், கதிரவன் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

உயிரிழந்த கதிரவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து கலவை போலீஸ்சார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கிணறு தூர்வாரும் பணியின்போது தொழிலாளி உயிரிழந்த இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# நந்தா பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா



மாணவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதன் மூலம் சமூக மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு வெள்ளி விழாவினைக் கடந்து வீர நடைபோடும் நந்தா பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா இனிதே நடைபெற்றது.

இளநிலை முதலாமாண்டு வகுப்புகளின் துவக்க விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர் பானுமதி சண்முகன் மற்றும் சென்னையில் செயல்பட்டு வரும் மல்டிகோர் வேர் நிறுவனத்தின் முதன்மை மனிதவள அலுவலர் சசிகாந்த் ஜெயராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையேற்று உரையாற்றுகையில், 26வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நந்தா பொறியியல் கல்லூரி தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலிடமிருந்தும், தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்தும் உயரிய பெற்றுள்ளதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். இதன் மூலம் மாணவர்களின் கல்வி மற்றும் தரச்சான்றிதழ் ஆராய்ச்சியின் தரமானது உலகளவில் உறுதி செய்யப்படுவதாக கூறினார்.

மேலும், கல்லூரி பருவம் என்பது தனது பள்ளி பருவத்தினை கடந்து எதிர்காலத்தில் தனது வாழ்க்கையினை மகிழ்ச்சியாக வாழ்வதற்கு புதிய அத்தியாயத்தின் தொடக்கம் என்று மாணவர்கள் முதலில் உணரும் தருணம் என்றார். இத்தருணத்தில், நான்கு ஆண்டுகள் கடந்து வெறும் பட்டதாரியாக வெளியேறுவதைத்தடுத்து, சமூகபிரச்சனைகளுக்கு புதிய தொழில்நுட்ப உதவியுடன் தீர்வுகளை கண்டெடுத்து சிறந்த பொறியாளனாக வெளியேற வழிவகைச்செய்யும்என சிந்தித்து செயல்பட புதிய மாணவர்களைக் கேட்டு கொண்டார். அதுபோல, பிள்ளைகளிடம் அதிக மதிப்பெண்களை எதிர்பார்க்காமல் திறமைகளின் மீது நம்பிக்கை வைத்து "முயற்சி தேய திருவினையாக்கும்" என்று அவர்களுக்கு காலம்தவறாமல் உற்சாகம் அளிக்க பெற்றோர்கள் முன்வரவேண்டும் என்று கூறி, புதியதாக இணைவுப் பெற்ற மாணவ மாணவிகளுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

முன்னதாக கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி அவர்கள் முதலாமாண்டு பயிலயிருக்கும் மாணவர்களையும், அவர்தம் வரவேற்றார்.பெற்றோர்களையும்

இதனை தொடர்ந்து, மல்டிகோர் வேர் நிறுவனத்தின் முதன்மைமனிதவள அலுவலர் சசிகாந்த் ஜெயராமன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், பெற்றோர்களுக்குதனதுபிள்ளைகள் கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் நாள் என்பது கனவுகள் நிறைவேறும் நாள் ஆகும். அதாவது ஒருவனை 18 முதல் 24 வயது முடியும் வரை நல்ல பழக்கங்களை கற்றுக் கொண்டு தன்னை வாழ்வின் அடுத்த கட்டத்திற்கு இந்த கல்லூரி காலம் அழைத்துச் செல்லும் என்பதாகும். ஆதலால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கட்டுபடுத்துவது மற்றும் கண்காணிப்பதனைத் தவிர்த்து மிகுந்த அக்கரையுடன் நாள்தோறும் தவறாமல் கலந்துரையாடவேண்டும் என்று பெற்றோர்களைக்கேட்டு கொண்டார்.

மேலும், மாணவர்கள் நான்கு ஆண்டுகள் படிப்பு என்பதை நம்பாமல் தொடர்ச்சியாக பல்வேறு விஷயங்களைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் செலுத்தவேண்டும். கழுகு பார்வை போல தன் சிந்தனையினை ஒரு முகப்படுத்தி நல்ல எண்ணங்கள், நினைவுகள், நல்நடத்தையுடன் சிறப்பானதொரு வாழ்க்கை அமைந்திட ஆசிர்வாதம் கலந்த வாழ்த்துக்கள் என்று கூறி மாணவர்களுடன் நேரிடையாக கலந்துரையாடினார்.

இவ்விழாவில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். நந்தகோபால், பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் ஜீ. மோகன்குமார் மற்றும் நந்தா தொழில் நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே.வேலுசாமி ஆகியோர் கலந்து கொண்டு முதலாமாண்டு மாணவர்களை வரவேற்று வாழ்த்திப் பேசினார்கள்.

விழாவின் முடிவில், விழாவின் ஒருங்கிணைப்பாளரும் முதலாமாண்டு பொறியியல் துறையின் தலைவருமான ஆர். திருநீலகண்டன் அவர்கள் நன்றி கூறினார்.



# ஈரோடு மாவட்டத்தில் உலக தேங்காய் தினத்தையொட்டி கலெக்டர் ச.கந்தசாமி தென்னங்கன்றினை நட்டு வைத்தார்

ஈரோடு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், உலக தேங்காய் தினத்தையொட்டி தென்னங்கன்றினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (02.09.2026) நட்டு வைத்தார்.

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் செப்டம்பர் 2 ஆம் தேதி உலக தேங்காய் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. தேங்காய் சாகுபடியின் முக்கியத்துவம், தேங்காய் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

தேங்காய் மரம் "கற்பக விருட்சம்" என்று அழைக்கப்படுகிறது. தேங்காய் நீர், தேங்காய் பால், தேங்காய் எண்ணெய், நார் மற்றும் ஓடு உள்ளிட்ட அதன் அனைத்து பகுதிகளும் மனித வாழ்வில் பல்வேறு பயன்பாடுகளைக் கொண்டுள்ளன. உணவுப் பொருட்கள் தயாரிப்பு,மருத்துவம்,அழகுசாதனப் பொருட்கள், கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி துறைகளில் தேங்காய் முக்கிய பங்கு வகிக்கிறது. தேங்காய் சாகுபடி இந்தியாவின் வேளாண் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க இடத்தைப்பெற்றுள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தேங்காய் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும்,மதிப்புக்கூட்டப்பட்ட தேங்காய் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதனையொட்டி பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

உலக தேங்காய் தினத்தையொட்டி, தேங்காய் விவசாயிகளின் உழைப்பை பாராட்டுவதோடு, தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருட்களின் பயன்பாட்டை அதிகரிக்க அனைவரும் முன்வர வேண்டும். அதன்படி, இன்றையதினம்மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உலக தேங்காய் தினத்தையொட்டிதென்னங்கன்றினை நட்டு வைத்து, விவசாயிகளுக்கு தென்னங்கன்றினை வழங்கினார். இந்நிகழ்வின் போது, வேளாண்மை இணை இயக்குநர் இரா. சிவக்குமார், தோட்டக்கலை துணை இயக்குநர் குரு சரஸ்வதி, விவசாயிகள், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இலவச மின்சார யூனிட் மற்றும் உற்பத்தி கூலி உயர்வு:

# தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி, விசைத்தறித் தொழிலை பாதுகாக்க தமிழ்நாடு அரசுக்கு கூட்டமைப்பு கோரிக்கை



தமிழகத்தில் 1.68 லட்சத்திற்கும் மேற்பட்ட விசைத்தறிக் கூடங்களில் 5 லட்சத்திற்கும் அதிகமான விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. இத்தொழிலை நேரடியாகவும் மறைமுகமாகவும் சார்ந்து சுமார் 20 லட்சம் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பெற்று வருகின்றனர்.

விசைத்தறித் தொழிலின் தற்போதைய நிலை, உற்பத்திச் செலவு அதிகரிப்பு மற்றும் தொழிலாளர்களுக்கான கூலி உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு, தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் தேவையாக உள்ளதாக தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலவச மின்சார யூனிட் உயர்த்த கோரிக்கை

செப்டம்பர் 1-ஆம் தேதி சட்டப்பேரவையில் நடைபெற்ற கைத்தறித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, டேரிப் 3ஏ2 பிரிவின் கீழ் இயங்கி வரும் விசைத்தறிக் கூடங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 1,000யூனிட் இலவச மின்சாரத்தை 1,500யூனிட்டாகஉயர்த்துவது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என விசைத்தறியாளர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

எனினும், மானியக் கோரிக்கையின்போது இது தொடர்பான அறிவிப்பு வெளியாகாத நிலையில், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதியை அரசு பரிசீலித்து, 1,000 யூனிட் இலவச மின்சாரத்தை 1,500 யூனிட்டாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வேட்டி-சேலை உற்பத்தியில் கூடுதல் செலவு

தமிழக அரசின் இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டத்திற்காக புதிய வடிவமைப்பிலான வேட்டி மற்றும் சேலைகளை உற்பத்தி செய்வதால் விசைத்தறியாளர்களுக்கு கூடுதல் உற்பத்திச் செலவு ஏற்படுவதாககூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஒரு விசைத்தறிக்கு சுமார் ரூ.5,000 வரை கூடுதல் செலவினம் ஏற்படுவதாகவும், உற்பத்தி முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் உற்பத்தி நேரம் மற்றும் தொழிலாளர் உழைப்பு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, வேட்டி உற்பத்தி அளவு 3.75 மீட்டரில் இருந்து 2 மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளதால், குறிகட்டும் பணிகள் அடிக்கடி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் உற்பத்தி நேரம் அதிகரிப்பதுடன், தொழிலாளர்களுக்கான கூலிச் செலவும் உயர்வதாக கூட்டமைப்பு கூறியுள்ளது.

ஜரிகை பார்டருடன் சேலை உற்பத்தி

நடப்பு ஆண்டில் ஜரிகை பார்டருடன் கூடிய சேலைகள் உற்பத்திசெய்யப்படுவதால், வழக்கமான உற்பத்தியுடன் ஒப்பிடும்போது கூடுதல் உழைப்பு மற்றும் நேரம் தேவைப்படுவதாகவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, இலவச வேட்டி-சேலை திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் வேட்டி மற்றும் சேலைகளுக்கான உற்பத்திக் கூலியை உரிய அளவில் உயர்த்தி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசின் கவனத்திற்கு கூட்டமைப்பு கோரிக்கை

விசைத்தறித் தொழிலின் தொடர்ச்சியான செயல்பாடு, உற்பத்திச் செலவுகள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. 1. விசைத்தறிக் கூடங்களுக்கான இலவச மின்சாரத்தை 1,000 யூனிட்டில் இருந்து 1,500 யூனிட்டாக உயர்த்த வேண்டும்.

2. இலவச வேட்டி-சேலை திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்திக் கூலியை உயர்த்தி வழங்க வேண்டும்.

3. புதிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முறைகளால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை கருத்தில் கொண்டு உரிய கூலி நிர்ணயம் செய்ய வேண்டும்.

4. விசைத்தறியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் தேவையான நலத்திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

5. தமிழகத்தின் முக்கியமான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத் துறைகளில் ஒன்றான விசைத்தறித் தொழிலின் நிலைத்தன்மையை உறுதி செய்ய நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விசைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பை கருத்தில் கொண்டு, தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான ஆதரவை தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும். இதன் மூலம் விசைத்தறியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் இத்தொழிலைச் சார்ந்துள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க முடியும் என ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

# சபாநாயகர் இருக்கையில் அமர்ந்த முதல் பெண்: மாற்றுத்தலைவரான சத்யபாமா அவையை நடத்தினார்



தமிழக சட்டசபையின் மாற்று பேரவை தலைவராக(மாற்று சபாநாயகர்) தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த திருப்பூர்வடக்குதொகுதி பெண் எம்.எல்.ஏ. சத்யபாமா நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்று முதன்முறையாக சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து அவையை வெற்றிகரமாக வழிநடத்தினார்.

தமிழக சட்டசபை கூட்டத்தொடரில் மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்கள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. வழக்கமாக, சட்டசபை நிகழ்வுகளை சபாநாயகர் வழிநடத்துவார். அவர் அவையில் இல்லாத நேரத்தில் துணை சபாநாயகர் அவையை நடத்துவார்.சபாநாயகர், துணை சபாநாயகர் ஆகிய இருவருமே அவையில் இல்லாத சூழ்நிலை ஏற்படும்போது,அவையைதடையின்றி நடத்துவதற்காக 'மாற்று தலைவர்கள் குழுஅமைக்கப்படுவது வழக்கம்.

அந்த வகையில், தற்போதைய சட்டசபையின் மாற்று பேரவை தலைவர்கள் பட்டியலைசபாநாயகர்ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்த தலைவர்கள் குழுவில்தமிழகவெற்றி கழகத்தை சேர்ந்த திருப்பூர்வடக்குதொகுதி பெண் எம்.எல்.ஏ. சத்யபாமா உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

சபாநாயகர் இருக்கையில் சத்யபாமா

இந்நிலையில், இன்று சட்டசபையில் மானிய கோரிக்கை மீதான விவாதங்கள் நடைபெற்று கொண்டிருந்தபோது, சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகிய இருவரும் தற்காலிகமாக அவையில் இல்லை. இதனை தொடர்ந்து, மாற்று பேரவை தலைவரான தவெக எம்.எல்.ஏ.சத்யபாமா, சபாநாயகர் நாற்காலியில் சென்று அமர்ந்தார்.

பின்னர் அவர், சட்டசபை விவாதங்களை நடுநிலையோடு திறம்பட அவையை தொடர்ந்து வழிநடத்தினார். தவெக கட்சியின் சார்பில் பெண் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து அவையை நடத்தியது அரசியல் வட்டாரத்தில் பெரும்கவனத்தைஈர்த்துள்ளது.

அமைச்சர்கள் குழப்பமும், பாராட்டும்

சத்யபாமா அவையை நடத்தி கொண்டிருந்தபோது, விவாதத்தில் குறுக்கிட்டு பேசிய அமைச்சர் ஒருவர், அவரை தவறுதலாக "துணை பேரவை தலைவர்" என குறிப்பிட்டு பேசினார். உடனே அவையில் இருந்த உறுப்பினர்கள், "அவர் துணை பேரவை தலைவர் இல்லை, மாற்று பேரவை தலைவர்" என்று சுட்டிக்காட்டி சரிசெய்தனர். இதனால் அவையில் சிறிது நேரம் கலகலப்பு ஏற்பட்டது.

பாராட்டு

சபாநாயகர் நாற்காலியில் அமர்ந்து மிகவும் பொறுமையாகவும், கம்பீரமாகவும் அவையை வழிநடத்திய தவெகபெண் எம்.எல்.ஏ. சத்யபாமாவின் செயல்பாட்டை, திமுகவை சேர்ந்த தங்கம் தென்னரசு பேசியதாவது, "லேடி வெல்லிங்டன் இந்த சட்டப்பேரவைக்கு வழங்கிய ஆசனத்தில் ஒரு பெண்மணி பேரவை தலைவராக அமர வேண்டும் என்பது நீண்ட காலமாக எல்லோரிடத்திலும் இருக்கும் எதிர்பார்ப்பு.


இன்றைக்கு மாற்று தலைவராக நீங்கள் அந்த இருக்கையில் அமர்ந்திருப்பதை பார்க்கும்போது உள்ளபடியே பேரவை உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறோம். எங்கள் மகிழ்ச்சியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்" என்றார். பல்வேறு கட்சி மக்கள் பிரதிநிதிகளும் மனதார பாராட்டினர்.

மாற்று பேரவை தலைவர்கள் குழு

இந்த மாற்று பேரவை தலைவர்கள் குழுவில் சத்யபாமாவுடன் சேர்த்து, தவெகவை சேர்ந்த விஜய் சரவணன், மதார் பதுருதீன் ஆகியோரும், திமுக தரப்பில் காதர் பாட்சா முத்துராமலிங்கம், அதிமுக சார்பில் தளவாய் சுந்தரம் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தாரகை கத்பர்ட் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# Iran retaliates US strikes; Trump aides push for deescalation before midterms

Iran launched a fresh wave of attacks on US targets across the Middle East on Wednesday, escalating tensions following an extensive American bombardment and a deadly strike on a wedding ceremony in southern Iran that killed four, including a four-year-old boy. Iran's Revolutionary Guards said they targeted US bases in Jordan, the United Arab Emirates, Kuwait, Bahrain and Iraq's autonomous Kurdistan region, marking the heaviest exchange between the two sides in weeks.



The escalation came after US President Donald Trump warned of "much harder and higher" attacks if Tehran retaliated against the American strikes.

US Central Command on Tuesday said it targeted "air defense sites, radar systems, maritime assets and facilities, mine laying capabilities, and communications sites" associated with the Islamic Revolutionary Guard Corps.

It added that the strikes followed a recent attack by IRGC against commercial shipping in the Strait of Hormuz and against American service members

"The strikes follow recent attempted attacks by the IRGC against commercial shipping in the Strait of Hormuz and against American service members," Central Command added in the statement posted on X.

At least five people were killed and 50 were injured at a residential home in Kuhestak, Sirik, a coastal area on the Strait of Hormuz. A 4-year-old child was reportedly among those killed, reported the IRNA news agency citing a provincial official who put the number of wounded at 68. Iran's foreign ministry condemned the killing and said that the cruelty cannot be separated from the chain of atrocities that happened before. "This cruelty cannot be separated from the chain of atrocities that preceded it in #Minab, #Lamerd, Qeshm and elsewhere nor from the strikes on military targets that were dressed in deceptive justifications," Esmaeil Baqaei said. US President Donald Trump said the strikes were in retaliation for Iran trying to put mines in the strait and for an earlier assault on a military base and warned of more attacks if Tehran responded, Bloomberg reported.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.